பணியாளர் மற்றும் நிருவாகச்
சீர்திருத்தத்(எஸ்) துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை–600 009.

கடித (நிலை) எண். 63 /எஸ்/2012 , நாள். 30.04.2012

அனுப்புநர்
திரு தேபேந்திரநாத் சாரங்கி, இ.ஆ. ப.,
அரசு தலைமைச் செயலாளர்.

பெறுநர்
அனைத்து அரசு முதன்மைச் செயலாளர்கள்/ அரசுச் செயலாளர்கள், சென்னை – 9.
அனைத்து துறைத் தலைவர்கள் / மாவட்ட ஆட்சியர்கள்.
செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை – 6,
கருவூலம் மற்றும் கணக்குகள் இயக்குநர், சென்னை – 15.

ஐயா,

பொருள் பணியாளர் – அரசுப் பணியாளர்கள் இடமாற்றம் பொது மாற்றல்களுக்கு விதிக்கப்பட்ட தற்காலிகத் தடையாணை 2012–2013 ஆம் ஆண்டுக்கு விலக்கி ஆணை வெளியிடப்படுகிறது.

பார்வை
1. அரசாணை (நிலை) எண். 10, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (எஸ்) துறை, நாள் 07.01.1994.
2. அரசுக் கடித எண். 23847/எஸ்/1998–1, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத்(எஸ்) துறை, நாள் 5.8.1998.
3. அரசுக் கடித எண். 25192/எஸ்/1999–1, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத்(எஸ்) துறை, நாள் 21.05.1999.
4. அரசுக் கடித எண். 24954/எஸ்/2011–1, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத்(எஸ்) துறை, நாள் 29.9.2011.

– – –

பார்வை 1 மற்றும் 2–இல் காணும் ஆணைகளின்படி ஒவ்வொரு ஆண்டின் ஏப்ரல் மாதம் 1–ஆம் நாள் முதல் மே மாதம் 31–ஆம் நாள் முடிய உள்ள மாற்றல் காலத்தில் அரசுப் பணியாளர்களின் பொது மாற்றல்கள் நடைபெற வேண்டும். நிருவாகத் தேவையில்லாத பட்சத்தில் 3 ஆண்டுகள் பணி முடித்தவர்கள் என்ற காரணத்தினால் மட்டும் செய்யப்படும் பொது மாற்றல்களுக்கு, அரசின் நிருவாகச் செலவினைக் குறைக்கும் பொருட்டு 1999–ஆம் ஆண்டு தடை விதிக்கப்பட்டது. பின்னர் பொது மாற்றல்களுக்கான இத்தடையாணை 2000, 2001 , 2002, 2003 மற்றும் 2004–ஆம் ஆண்டுகளுக்கும் நீட்டிக்கப்பட்டது.

(த.பி.பா.)

2. சென்ற 2005 மற்றும் 2006–ஆம் ஆண்டுகளுக்கும் பொது மாற்றல்களுக்கு விதிக்கப்பட்டுள்ள தடையை நீட்டிக்க முடிவெடுக்கப்பட்டது. இருப்பினும் நிருவாகக் காரணங்களால் அவ்வாண்டுகளில் ஏப்ரல் 1–ஆம் நாள் முதல் மே 31–ஆம் நாள் முடிய உள்ள மாற்றல் காலத்திற்கு முன்பாக தடையை நீட்டித்து, ஆணையேதும் வெளியிடப்படவில்லை. இருந்தபோதிலும், மேற்படி தடையாணையை நீக்கி ஆணைகள் வெளியிடப்படாததால், பொது மாறுதல்களுக்கான தடையாணை அவ்வாண்டுகளிலும் தொடர்ந்து நடைமுறையில் இருந்து வந்தது. 2007 முதல் 2011–ஆம் ஆண்டு வரை இத்தடை நீட்டிக்கப்பட்டு ஆணைகள் வெளியிடப்பட்டன. இருப்பினும் பொதுமாறுதல்களுக்கான தடையாணை நடைமுறையில் இருந்த எல்லா ஆண்டுகளிலும் நிருவாக தேவையின் பொருட்டு மாற்றல்கள் இன்றியமையாததெனில், அத்தகைய மாற்றல்களை சில வரையறைகளுக்குட்பட்டு அனுமதித்தும், காலியாக உள்ள இடத்திற்கு விருப்ப மாறுதல் கோரும் விண்ணப்பங்கள் பரஸ்பர மாற்றல் மற்றும் கணவன்/மனைவி பணிபுரியும் இடத்திற்கு மாற்றல் கோருபவர்களின் விண்ணப்பங்கள் பயணப்படி மற்றும் தினப்படி முதலியவை கோராத பட்சத்தில், பரிசீலனை செய்து, மாற்றல் வழங்க அனுமதித்தும் ஆணைகள் வெளியிடப்பட்டன.

3. அரசுப் பணியாளர்களின் இடமாற்றம் மற்றும் பொது மாற்றல்களுக்கு விதிக்கப்பட்ட தற்காலிக தடையாணையை விலக்கிக்கொள்வது குறித்து அரசு நன்கு ஆய்வு செய்த பின்னர், நிருவாகச் செலவினை குறைக்கும் நோக்கில் பொது மாறுதலுக்கு 1999ஆம் ஆண்டு முதல் 2011ஆம் ஆண்டு வரை அமலில் இருந்து வந்த தடையாணையினை 2012–2013ஆம் ஆண்டிற்கு விலக்கி ஆணையிடப்படுகிறது.

4. மேற்குறிப்பிட்ட ஆணை உடனடியாக அமலுக்கு வருகிறது. மேலும், மேற்குறிப்பிட்ட ஆணையினை தவறாமல் கடைபிடிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

தங்கள் உண்மையுள்ள

30.4.12

அரசு தலைமைச் செயலாளருக்காக

30/04/12

<u>நகல்</u>

பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையின்
அனைத்து அலுவலர்கள் / பிரிவுகள், சென்னை – 9.
நிதித்துறை, சென்னை – 9
மாநில கணக்காயர் 1 மற்றும் 2, சென்னை – 18.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை 9/5/79 மற்றும் 35.
முதலமைச்சர் அலுவலகம், சென்னை – 9
இருப்புக் கோப்பு /உதிரி நகல்கள்.